**27.10.2022**

**அ.வ.எண். 232/2012**

**வா.சா.2 நல்லம்மாள் அவர்களின் 9ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

வாதி தனது நிலத்திற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். தாவா சொத்தின் சர்வே எண் எனக்கு தெரியாது. அதன் விஸ்தீரணம் எனக்கு தெரியாது. தாவா கிராமத்தின் பெயர் நெல்வாய். நெல்வாய் கிராமத்தில் இரண்டு இன சொத்துக்களுக்கு இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பெருங்குடி கிராமத்தில் எத்தனை சொத்துக்களுக்கு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது.

நான் சாட்சியம் அளிப்பதற்கு வாதி என்னை அழைத்து வந்தார். ராமதாஸின் உடன்பிறந்தவர்கள் யார் என்று எனக்கு தெரியாது. ராமதாஸின் பெற்றோர்கள் பெயர் எனக்கு தெரியாது. ராமதாஸின் மனைவி பெயர் நாச்சியம்மாள். ராமதாஸின் மனைவி நாச்சியம்மாள் என்பதற்கு அவரது குடும்ப அட்டையை நான் பார்த்துள்ளேன். எப்போது அந்த குடும்ப அட்டையை நான் பார்த்தேன் என்றால் ராமதாஸின் மனைவி இறப்பதற்கு முன்பு நான் பார்த்தேன். எந்த வருடத்திற்குண்டான குடும்ப அட்டை என்று எனக்கு தெரியாது.

அந்த குடும்ப அட்டையில் ராமன், மாயவன், சிவலிங்கம் மற்றும் விநாயகம் பெயர்கள் இருந்தது. எனது பிரமாண வாக்குமூலத்திலுள்ள விவரங்கள் எனக்கு தெரியாது. யார் சொல்லி பிரமாண வாக்குமூலம் தயார் செய்யப்பட்டது என்றால் ராமதாஸின் மனைவி மற்றும் பிள்ளைகளின் விவரங்கள் நான் தான் வழக்கறிஞரிடம் கூறினேன். நான் பிள்ளையார் கோயில் தெரு, லட்சுமிபுரம், குரோம்பேட்டையில் வசித்து வருகிறேன்.

நான் ராமதாஸின் 2ம் தர பங்காளி மகள் என்பதற்கு ஆவணங்கள் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை. எனது தந்தை பெயர் ராமதாஸ். அவருடன் பிறந்தவர்கள் யாரும் இல்லை. எனது தாத்தா பெயர் அனுமந்தன். அவருடன் பிறந்தவர்கள் பற்றி தெரியாது. எனது தாத்தாவின் பூர்வீகம் நாமக்கல் மாவட்டம். நாமக்கல் மாவட்டத்தில் எந்த ஊர் என்று எனக்கு தெரியாது. என் தாத்தாவிற்கு பூர்வீகமாக எந்த சொத்தும் இல்லை.

ராமதாஸின் பூர்வீக சொத்தின் சர்வே எண் எனக்கு தெரியாது. அவருக்கு 3 ஏக்கர் நிலம் சொந்தமாக உள்ளது. நான் அந்த நிலத்தினை பார்த்துள்ளேன். அந்த நிலத்தின் ஐக்குபந்தி விவரம் தெரியாது. ராமதாஸின் பெரிய மகன் வயது சுமார் 40 இருக்கும். ராமதாஸ் அவரது சொத்தினை யாருக்கு விற்பனை செய்தார் என்று

எனக்கு தெரியாது. ராமதாஸ் தனது சொத்தினை விற்பனை செய்துள்ளார் என்று பீமநாயக்கன்பட்டி கிராமத்தில் உள்ளவர்கள் சொன்னதன் அடிப்படையில் நான் சொல்கிறேன்.

சுமார் 30 வருடத்திற்கு முன்பு நான் அந்த ஊருக்கு சென்றபோது சொன்னார்கள். ராமதாஸ் நெல்வாய் கிராமத்தில் சொத்து கிரையம் வாங்கினார். எப்போது கிரையம் வாங்கினார் என்றும் மற்றும் அதன் சர்வே எண் மற்றும் விஸ்தீரணம் எனக்கு தெரியாது. யாரிடமிருந்து கிரையம் வாங்கினார் என்று எனக்கு தெரியாது. எனது பிரமாண வாக்குமூலத்திலுள்ள சர்வே எண்கள், விஸ்தீரணம் எதுவும் நான் சொல்லவில்லை என்றால் சரிதான்.

வாதி, அர்ச்சுனன், சின்னஅக்கா ஆகியோர்கள் மீது இந்த வழக்கு தொடர்ந்துள்ளார். சுமார் 10 வருடத்திற்கு முன்பு எனக்கு தலையில் அடிப்பட்டதால் பழைய விவரங்கள் மறந்துவிட்டது. சின்னஅக்கா மற்றும் அர்ச்சுனன் ஆகியோர்களுக்கு எந்த வருடம் திருமணம் நடந்தது என்று எனக்கு தெரியாது. சின்னஅக்கா என்பவர் அர்ச்சுனன் மனைவி என்பதற்கு ஆவணம் எதுவும் நான் பார்த்ததில்லை.

சின்னஅக்கா எந்த ஊர் என்று எனக்கு தெரியாது. அவருக்கு பரமேஸ்வரன்

என்ற மகனும் தனலட்சுமி என்ற மகளும் இருக்கிறார்கள். சின்னஅக்காவின் சொந்த ஊர் நாமக்கல் மாவட்டம். விவாகரத்து என்றால் கணவன் வேண்டாம் என்று சொல்லி பிரிந்து வாழ்வது. சின்னஅக்கா மற்றும் அர்ச்சுனன் ஆகியோர்களை நான் பார்த்ததில்லை. ராமதாஸை நான் பார்த்துள்ளேன். ராமதாஸ்க்கு எப்போது திருமணம் நடந்தது என்று எனக்கு தெரியாது. அவருக்கு நாச்சியம்மாளுடன் திருமணம் நடந்தது.

ராமதாஸின் மனைவியின் பெயர் அவரது குடும்ப அட்டையில் குறிப்பிடப்படும் என்றால் சரிதான். ராமன், மாயவன், சிவலிங்கம் மற்றும் விநாயகம் ஆகியோர்கள் சொத்தினை அனுபவித்து வந்ததற்கு ஆவணம் எதுவும் நான் பார்க்கவில்லை. நேரிலும் பார்க்கவில்லை. சிவலிங்கத்தை நான் பார்த்துள்ளேன். அவர் எப்போது இறந்தார் என்று எனக்கு தெரியாது. அவரது மனைவி பெயர் விஜயா. அவருக்கு 3 மகள்கள், 1 மகன். அவர்கள் பெயர் எனக்கு தெரியாது.

விநாயகத்தை நான் பார்த்துள்ளேன். அவர் எப்போது இறந்தார் என்று எனக்கு தெரியாது. அவரது மனைவி பெயர் தெரியாது. அவர்களுக்கு பிள்ளைகள் இருக்கிறார்களா என்று எனக்கு தெரியாது. பழனி என்பவர் விநாயகத்தின் மகன். ராமதாஸின் வாரிசு சான்றிதழை நான் பார்த்துள்ளேன். சுமார்

5,6 வருடங்களுக்கு முன்பு நான் பார்த்துள்ளேன். வாரிசுசான்றிதழை எப்போது வாங்கினார்கள் என்று எனக்கு தெரியாது.

வாரிசுசான்றிதழில் யார் பெயர் இருந்தது என்று எனக்கு தெரியாது. நான் ராமதாஸின் 2ம் தர பங்காளி என்று நான் கேள்விப்பட்டதன் அடிப்படையில் சொல்கிறேன். நேரிடையாக எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரிதான். என்னுடன் பிறந்தவர்கள் 9 பேர். அவர்களில் யாரேனும் விசாரணை செய்தால் நான் ராமதாஸின் 2ம் தர பங்காளியா இல்லையா என்று தெரியவரும் என்றால் அவர்களுக்கும் தெரியாது.

ராமன் என்பவரை நான் பார்த்ததில்லை. பரமேஸ்வரன் என்பவரை நான் பார்த்ததில்லை. தனலட்சுமி என்பவரை நான் பார்த்ததில்லை. சின்னஅக்கா என்பவர் ராமதாஸின் மனைவி என்றால் சரியல்ல. நாச்சியம்மாள் என்பவரை நான் பார்த்ததில்லை. வாதியை எனக்கு சுமார் 20 வருடமாக தெரியும். அதற்கு முன்பு அவர் பீமநாயக்கன்பட்டி கிராமத்தில் இருந்தார். ராமதாஸின் மனைவி சின்னஅக்கா இல்லை, நாச்சியம்மாள் தான் என்று வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். இந்த வழக்கை மாயவன் தான் தாக்கல் செய்துள்ளார். வாதி பிராதுவில் சொல்லியுள்ள விவரங்கள் எதுவும் எனக்கு தெரியாது.

சிவலிங்கம் மற்றும் விநாயகம் எந்த ஊரில் இறந்தார்கள் என்று எனக்கு தெரியாது. வழக்கின் விவரங்கள் எதுவும் தெரியாமல் ராமதாஸின் 2ம் தரபங்காளி என்று பொய்யாக சாட்சியம் அளிப்பதால் எனது சாட்சியம் ஏற்புடையதல்ல என்றால் சரியல்ல. ராமதாஸை குறித்து எந்த விவரமும் தெரியாமல் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.